மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, யார், யார் இதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். முத்தரப்பிலே இருப்பவர்களும் இருக்கிறார்கள், அரசுத் தரப்பிலே தொழிலாளர் நல அமைச்சர், தொழிலாளர் நலச் செயலாளர் போன்றவர்களும், தொழிலாளர் தலைவர்கள் பலரும் இருக்கிறார்கள். அதைப்போலவே தொழில் அதிபர்களும் இருக்கிறார்கள். எனவே முத்தரப்பினரும் சேர்ந்த குழுவாக இது இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட பட்டியலாக இருக்கிறது. அதைப்படிக்க வேண்டுமென்றால் நேரமாகிவிடும். முக்கியமான பிரச்னைகளுக்குக் கொள்கை வகுக்கும் குழுவாகத்தான் இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் முன்னிலையில் குறைகளை முறையீடு செய்து கொள்வதற்காகத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கு விடுப்பு அளிப்பதற்கு முடிவு செய்யப் பட்டு இருக்கிறது. அந்த விடுப்பு அளிப்பதை ஊதியத்தோடு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ஊதியத்தோடு கூடியதாக அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

State Film Finance Corporation

*758 Q.—THIRU R. R. MUNUSAMI :

THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to institute a Film Finance Corporation in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) தென் பிராந்தியத்தில், தனியாக, திரைப்பட நிதியுதவிக் கழகம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இது குறித்து மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, நமது தமிழ்நாட்டில் இப்பொழுது 'ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' இல்லாத காரணத்தால் பலபேர் தமிழ் நாட்டிலே இருப்பவர்கள் தயாரிக்க வேண்டுமென்று எண்ணுகின்ற நேரத்தில்

பம்பாயிலுள்ள சில மார்வாடிகள் 50,000 ரூபாய் கொடுத்துவிட்டால் 5 இலட்சம் ரூபாய் தருகிறோம் என்று பல மோசடிகள் நடந்து உயர்நீதி மன்றத்தில் வழக்குகளெல்லாம் இருக்கின்றன. எனவே, இங்கே இருப்பவர் களுக்கு வசதி செய்து தருகின்ற வகையில் ஒரு பிலிம் பைனான்ஸ் கார்ப்ப ரேஷனை சென்னையிலேயே அமைக்க மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, பம்பாயில் திரைப்பட நிதியுதவிக் கழகம் இருக்கிறது, அதை மத்திய சர்க்கார் ஆரம்பித்து இருக்கிறது. தென் மாநிலங்களில் உள்ளவர்களுக்கு அதிகக் கடன் வழங்கப் படவில்லை என்று கருதி சென்னையிலே இப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நமது அரசு மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டிருக்கிறது. முடிவை எதிர் பார்க்கிறோம்.

Bamboo forests

* 759 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister **for** Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to take over all the bamboo forests in the private sector in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இதனுடைய முழு விவரங்களை பொதுநன்மையைக் கருதி இப்பொழுது சொல்லாமல் இருப்பது நல்லது என்று அரசு கருதுகிறது.

Dr. H. V. HANDE : Once the question has been tabled in this House, the normal practice is to answer the question. If in the interests of the State the answer could not be given by the Minister, this question could have been disallowed at the earlier stage and need not have found a place in the list of questions. It could have been disallowed by the Hon. Speaker or the Hon. Minister could have stated to the Speaker earlier that it might be disallowed. But having admitted the question and when it comes before the House, I think it would not be right on the part of the Hon. Minister to say. பொது நன்மையைக் கருதி நாங்கள் சொல்லவில்லை என்று சொல்வதுமுறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.